DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.409/2020**

**P.W.15**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ராஜமுரளி |
| Father Name | : | ராமச்சந்திரன் |
| VILLAGE | : | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| CASTE | : | இந்து வெள்ளாளர் |
| CALLING | : | காவல் துணை கண்காணிப்பாளர், நில அபகரிப்பு பிரிவு, திண்டுக்கல் |
| RELIGION | : | இந்து |
| AGE | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.04.2023.**
(எதிரி ஆஜர்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திண்டுக்கல் நில அபகரிப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மதுரை மாநகர் தெற்குவாசல் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த சமயம் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.கார்த்திக் செல்வம் என்பவர் கடந்த 28.12.2017 ம் தேதி தெற்குவாசல் காவல் நிலைய குற்ற எண்.967/2017 இதச பிரிவுகள் 435, 427 வழக்கு கோப்பினை முதல் கட்ட விசாரணை முடித்து எனது பார்வைக்கு வைத்ததை கடந்த 04.01.2018 ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட சம்பவயிடமானது சார்பு ஆய்வாளர் தயார் செய்தபடியே இருந்ததால் நான் தனியாக பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை. பின்பு சாட்சிகள் சோமஸ் கந்தசாமி, கணேஷ்குமார், தீபக், உமா மகேஸ்வரி, சந்தோஷ், பாலாஜி, மணிகண்டன் இவர்களை விசாரிக்க இதில் கணேஷ்குமார் மற்றும் தீபக் தவிர அனைவரும் சார்பு ஆய்வாளரிடம் கூறியபடியே

வாக்குமூலம் கொடுத்ததால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய தினமே கணேஷ்குமார், தீபக் ஆகியோர்களிடம் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் தொடர் விசாரணையை சம்பவம் நடைபெற்ற இடமான சீத்தாராம் ஆஞ்சநேயர் கோவில் அருகே உள்ள கண்காணிப்பு கேமிராவை ஆய்வு செய்த போது எதிரி ஓட்டி வந்த வாகனமான TN 03 L 8708 Passion Pro என்ற இரு சக்கர வாகனம் என தெரிந்து கொண்டேன். அதன்படி விசாரணை செய்ததில் எதிரி பிரவீன் குமார் என்பவரை தெப்பக்குளம் காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டு தக்க பிணையத்தில் விடுவிக்கப்பட்டிருந்ததை தெரிந்து கொண்டேன். பின்பு எதிரியை தேடி வந்த நிலையில், 04.01.2018 ல் காலை 08.00 மணியளவில் மதுரை தவுட்டு சந்தை பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்த எதிரியை இவ்வழக்கின் காரணம் கூறி கைது செய்து காலை 08.15 மணியளவில் சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்ட VAO முத்துக்கருப்பன் மற்றும் தலையாரி சமயன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரிக்க எதிரி எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என்னுடன் எடுத்துச்சென்ற மடிக்கணினியில் பதிவு செய்தேன். அதனடிப்படையில் எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்த உடைகள் மற்றும் சம்பவத்தின் போது பயன்படுத்திய 2 செல்போன்கள் ஆகியவற்றை மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து அடையாளம் காட்டுவதாக கூறியதன் அடிப்படையில் எதிரியை அழைத்துச்சென்று வண்டியூர் பஸ் ஸ்டாப் அருகில் உள்ள PKM மண்டபத்தின் பின்புறம் வைத்து காலை 10.15 மணியளவில் எதிரி எடுத்து ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். பின்னர் இவ்வழக்கின் இதர சாட்சிகளான எதிரியை கைது செய்து பிணையத்தில் விடுத்த தெப்பக்குளம் சார்பு ஆய்வாளர் திரு.சக்தி மணிகண்டன், எதிரியை அடையாளம் காட்ட சிடியை பதிவிறக்கம் செய்து கொடுத்த கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான முத்துக்கருப்பன் மற்றும் சமயன் ஆகியோர்களையும் 65 (B) சான்று வழங்கிய தொழில்நுட்ப பிரிவு ஆய்வாளர் சுந்தரவடிவேல் அவர்களையும் மற்றும் முத்துப்பாண்டி ஆகியோர்களையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை தக்க

வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்துக்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கின் சாட்சிகள் சங்கர், வாகனத்தை பழுதுபார்த்த ராஜா, எதிரி பற்றி விவரம் சேகரித்து வந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ஞானகுரு, வாகனத்தை ஆய்வு செய்து சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் ஜாஸ்மின் மெர்ஸி கமலா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் கார்த்திக் செல்வம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் ஆவணங்களான MV Report, Estimation Bill, 65 (B) சாட்சிய சான்று ஆகியவற்றை பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். Estimation Bill அசாஆ 11 ஆகும். இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–

புகார் மனு பதிவு செய்வதற்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சம்பவயிடத்திலிருந்து போன் மூலம் தகவல் வந்ததா என்றால் எனக்கு தெரியாது. VAO, தலையாரி ஆகியோர்களை சாட்சியாக இருக்க வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. தவுட்டுச்சந்தை பேருந்து நிறுத்தம் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். அங்குள்ள நபர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை. அங்கிருந்த நபர்கள் சாட்சியாக முன்வரவில்லை என்பதற்கு ஏதேனும் குறிப்புகள் எழுதியுள்ளேனா என்றால் இல்லை. வண்டியூர் PKM திருமண மண்டபம் அருகே உள்ள நபர்களை சாட்சியாக இருக்க அழைத்தேனா என்றால் இல்லை. சாட்சி சுந்தரவடிவேல் என் விசாரணையில் பிரேமா என்பவர் வீட்டில் பொருத்தப்பட்ட சிசிடிவி கேமராவில் பதிவிறக்கம் செய்ததாக கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார், அவருடைய சான்றில் குறிப்பிட்டுள்ளார். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் சாட்சிகளை சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரி யாரென்றே தெரியாத காரணத்தினால் இந்த எதிரியை வேண்டுமென்றே இந்த வழக்கில் சேர்த்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த

வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.